# பொதுக்காலம் 26 ஆம் ஞாயிறு

திருவழிபாடு ஆண்டு - A

2020-09-27

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எசேக்கியேல் நூலிலிருந்து வாசகம் 18: 25-28,
திருப்பாடல் 25: 4-5. 6-7. 8-9
திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2: 1-11,
மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 21: 28-32

## திருப்பலி முன்னுரை:

ஆண்டவர் நல்லவர்: நேர்மையுள்ளவர்: ஆகையால், அவர் பாவிகளுக்கு நல்வழியைக் கற்பிக்கின்றார்.

இறைஇயேசுவின் நாமத்தில் அனைவருக்கும் அன்பு வாழ்த்துக்கள்! பொதுக்காலத்தின் 26ஆம் ஞாயிறுத் திருப்பலியில் செயல்வீரராய் பங்கேற்க வந்துள்ள இறைமக்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறோம்.

பெருமைக்குரிய அத்தனையும் துறந்து தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் நிலையை ஏற்றுக்கொண்டு, தம்மையே தாழ்த்தி, தந்தைக்குப் பணிந்து பிரமாணிக்கமாய் வாழ்ந்த இயேசுவின் வழியை நாமும் பின்பற்றி வாழ வேண்டும் என்னும் சிந்தனையும், நாம் ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்ட அழைத்தலுக்கு பிரமாணிக்கமாய் வாழவேண்டும் என்ற அறிவுறுத்தலும் இன்று நமக்கு ஆழமாக உணர்த்தப்படுகின்றன.

ஆகவே நாம் அனைவரும் ஆண்டவரே, உம் பாதைகளை நான் அறியச்செய்தருளும்: உம் வழிகளை எனக்குக் கற்பித்தருளும். உமது உண்மை நெறியில் என்னை நடத்தி எனக்குக் கற்பித்தருளும்: ஏனெனில், நீரே என் மீட்பராம் கடவுள்: உம்மையே நான் நாள் முழுதும் நம்பியிருக்கின்றேன்: என்ற செபத்தை பொருள் உணர்ந்து செபித்து கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையை நாமும் கொண்டு வாழ வரம் கேட்டுத் தொடரும் திருப்பலியில் இணைவோம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**அன்பின் அரசரே இறைவா,**
எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உமது இரக்கத்தின் கருவிகளாக செயல்பட்டு, மக்களிடையே பிறரன்பு செயல்களைத் தூண்டிஎழுப்புபவர்களாகத் திகழ உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**என்றென்றும் எமக்குத் துணைசெய்யும் தந்தையே!**
நாங்கள் ஒவ்வொருவரும் இயேசுவைப் போல பெருமைக்குரிய அத்தனையும் துறந்து, எம்மையே தாழ்த்தி, தந்தைக்குப் பணிந்து பிரமாணிக்கமாய் வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைஞ்சுவோருக்கு இரங்கிடும் எம் இறைவா!**
எம் குடும்பங்களில் உள்ள அனைவரும் தத்தம் பணிகளை செவ்வனே செய்யவும், அதன்மூலம் தம் வாழ்வின் நிறைவை மகிழ்வாய் பெற்று உமது சாட்சிகளால் அனைவரையும் அன்புடனும் பாசத்துடனும் வாழ நடத்த தேவையான இரக்கத்தையும் பொறுமையையும் பெற்றிட வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

**துன்பத்தில் நல்தேற்றுதல் தரும் எம் இறைவா,**
மீண்டும் ஆலயம் வர அழைத்தவரே! இந்தத் தொற்று நோயின் தாக்கத்திலிருந்து இவ்வுலகைக்காக்கவும், மக்கள் அனைவரும் தம் பணிகளைத் தொடரப் பயமற்ற, நோயற்றச் சூழலை உருவாக்கத் தேவையான அரசியல், பொருளாதார வளர்ச்சிகள் பெறவும், மீண்டும் சமூக உறவுகள் தழைத்திடவும் உமது அருள் ஆசீரைப் பொழியுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**மாசின்மையின் ஊற்றாகிய எம் இறைவா,**
எமது இளைஞர்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்களது இளமைப் பருவத்தின் பாவங்களையும், குற்றங்களையும் நினையாது உமது இரக்கத்தையும், உமது பேரன்பையும் அவர்கள் மேல் பொழிந்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பேரின்பப் பரம்பொருளே! எம் இறைவா!**
உலகெங்கும் இயற்கைச் சீற்றங்களாலும், காட்டுத் தீயினாலும், மழையினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், முதியோர்கள், அனாதைகள், கைவிடப்பட்டோர் மற்றும் தங்களின் வாழ்வாதாரங்களை இழந்தவர்கள் ஆகிய அனைவருக்கும் தேவையான உதவிகளையும், பாதுகாப்பையும், சுகத்தையும், தொற்று நோயிலிருந்து பாதுகாப்பையும் அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நலம் அளிக்கும் வல்லவரே! எம் இறைவா!**
தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து எங்களைக் காத்துவந்தவரே, நோயின் வீரியம் குறைந்து மக்கள் அனைவரும் நலமுடனும், வளமுடனும் வாழத் தேவையான அருளையும், குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் தொற்றுநோயினால் ஏற்பட்ட மனஅழுத்தத்திலிருந்து விடுபடவும் தேவையான நல்ல சுகாதார, வளமான நல்ல சூழ்நிலையைத் தரவேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.